# මැතිවරණ කොමිෂන් සභාව
# தேர்தல் ஆணைக்குழு

පොදු කාර්යාලය : 011-2868441, 2868442, 286844
பொது அலுவலகம்
ෆැක්ස්/தொலைநகல் : 011-2868426

මැතිවරණ කොමිෂන් සභා කාර්යාලය
සරණ මාවත, රාජගිරිය (10107)
தேர்தல் ஆணைக்குழு அலுவலகம்
சரண மாவத்தை, இராஜகிரிய (10107)

*web : www.elections.gov.lk e-mail : info@elections.gov.lk*


| | | |
|---|---|---|
| මගේ අංකය : | ඔබේ අංකය : | දිනය : |
| எனது இல: EC/EDR/LAE/2023/04B | உமது இல. | திகதி : 2023.01.07 |

**சுற்றறிக்கை இல. 28**

அனைத்து உள்ளூராட்சி ஆணையாளர்களுக்கும் உதவி உள்ளூராட்சி ஆணையாளர்களுக்கும்,

**உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் - 2023**
**உள்ளூர் அதிகார சபைகளுக்குச் சொந்தமான அரச வளங்களைத் துஷ்பிரயோகம் செய்தல்**

2023 உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் தொடர்பில் அரசாங்கத்திற்கும் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளுக்கும் சொந்தமான ஆதனங்கள் தேர்தல் காலப்பகுதியினுள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடுப்பதற்கும் வாக்கெடுப்பு நடைபெறும் மாகாணங்களுக்கு உரிய அலுவலர்களும் ஊழியர்களும் ஆர்சேர்ப்புச் செய்யப்படுவதை/ பதவி உயர்த்தப்படுவதை/ இடமாற்றல் செய்யப்படுவதை தடுத்தல் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட EC/EDR/LAE/2023/04B ஆம் இலக்க, 2023.01.05 ஆம் திகதிய சுற்றறிக்கை இல. 20 மீதும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2313/32 ஆம் இலக்க, 2023.01.04 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மீதும் தங்களது கவனத்தைக் கோர விரும்புகின்றேன்.

02. அதேபோன்று அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தத்தின் 104(ஆ) (4)(அ) உட்பந்திக்கு அமைய "தேர்தல் காலத்தின்போது அரசுக்கு அல்லது ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான அசையும் அல்லது அசையா ஆதனம் எதனையும்" ஏதேனும் அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவொன்றை தேர்ந்தெடுக்கும், ஊக்கப்படுத்தும் அல்லது தடுக்கும் நோக்கத்திற்காக ஏதேனும் அரசியற் கட்சியினால் அல்லது சுயேச்சைக் குழுவினால் பயன்படுத்தப்படுவதைத் தடுக்கும் தத்துவம் தேர்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களின் பேரில் அதன் தவிசாளருக்கு அல்லது தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்திற்கு உண்டு. குறித்த உறுப்புரையின் (ஆ) உட்பந்தியின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவினால் செய்யப்படும் அவ்வாறான பணிப்பொன்றுடன் ஒத்திசைவாதல் அத்துடன் அமுல்படுத்துதல் நிமித்த காலத்தில் அரசாங்கத்தின் பொறுப்பிலுள்ள அல்லது நிருவகிக்கும் அலுவலர்கள் அனைவரதும் கடமையாதல் வேண்டும். அவ்வாறானதொரு பணிப்பு மீறப்படுமிடத்து, நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மீது மூன்றாண்டு கால மறியற்றண்டனை விதிக்கப்படல் அல்லது ஓரிலட்சம் ரூபா குற்றப்பணம் விதிக்கப்படல் அல்லது அவை இரண்டுக்கும் ஆளாதல் வேண்டுமெனவும் அரசியலமைப்பில் குறிப்பிடப்படுகின்றதென்பதை வலியுறுத்துகின்றேன்.

03. ஆதலால், மேற்கூறிய விடயங்கள் மீது கவனம் செலுத்தி, அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை வலுவாகப் பின்பற்றியொழுகுமாறும் வாக்கெடுப்பு நடைபெறும் காலப்பகுதியினுள் எந்தவொரு கட்சி/ வேட்பாளரையும் ஊக்கப்படுத்தும் அல்லது பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் செயலாற்றுதல் அல்லது அதற்காக நிறுவனத்திற்குச் சொந்தமான அசையாத மற்றும் அசையும் ஆதனமெதனையும் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறும் அனைத்து உள்ளூர் அதிகார சபைகளின் தலைவர்களுக்கும் நிருவாக அலுவலர்களுக்கும் அறிவுறுத்தல்களை வழங்குமாறு அறியத் தருகின்றேன்.

சுதந்திரமானதும் நீதியானதுமான ஒரு தேர்தலை நடாத்துவதற்கு தங்களிடமிருந்து கிடைக்கும் ஒத்துழைப்பைப் பெரிதும் போற்றுகின்றேன்.

சமன் ஸ்ரீ ரத்நாயக்க
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

பிரதிகள்:

| | | |
|---|---|---|
| 01. | செயலாளர், தேர்தல் ஆணைக்குழு | – தகவலுக்கும் அவசியமான நடவடிக்கைக்கும். |
| 02. | மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்/ மாவட்ட பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் | – தகவலுக்கும் அவசியமான நடவடிக்கைக்கும். |


සභාපති
தவிசாளர்
දුරකථන/தொலைபேசி : 011-2868444
ෆැක්ස්/ தொலைநகல் : 011-2868445
*e-mail : chairman@elections.gov.lk*

මැතිවරණ කොමසාරිස් ජනරාල්
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்
දුරකථන/தொலைபேசி : 0112885207
ෆැක්ස්/தொலைநகல் : 0112885208
*e-mail : cge@elections.gov.lk*

අතිරේක මැතිවරණ කොමසාරිස්
(නීති හා විමර්ශන)
மேலதிக தேர்தல்கள் ஆணையாளர்
(சட்டம் மற்றும் விசாரணைகள்)
දුරකථන/தொலைபேசி: 011-2867471
ෆැක්ස්/தொலைநகல்/Fax : 011-2868448